## கொடைக்கானல்
# பூம்பாறையில் ஆணவக் கொலை! உறவினர்கள் போராட்டம்!

கொடைக்கானல், ஆக. 3 -

கொடைக்கானல் அருகே பூம்பாறை மலைக் கிராமத்தில் ஆதிக்க சாதியினரின் நிலத்தில் குதிரை மேய்ந்த விவகாரத்தில் ஏற்பட்ட தகராறில் தலித் இளைஞர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் - கொடைக்கானல் அருகே உள்ள பூம்பாறை கிராமத்தைச் சேர்ந்த ரகு என்பவருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த ராமர், பிரசாந்த் ஆகியோருக்கும் விவசாயத் தோட்டத்தில் குதிரை மேய்ந்தது தொடர்பாக தகராறு இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

நேற்று தோட்டப் பகுதிக்கு ராமர் மற்றும் பிரசாந்தை அழைத்துச் சென்ற ரகு, அரிவாளால் சரமாரியாக வெட்டியுள்ளார்.

இதில் ராமர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பலத்த காயமடைந்த பிரசாந்த், தேனி அரசு மருத்துவமனையில் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த கொலை சம்பவத்தில் தொடர்புடைய ரகு காவல்துறையில் சரணடைந்ததாக கூறப்படுகிறது.

இருப்பினும், இந்த கொலையில் மேலும் பலருக்கு தொடர்பு இருப்பதாக குற்றம்சாட்டிய உறவினர்கள், மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கொளத்தூர் தேர்தலில் முறைகேடு!
## வாக்குப் பதிவு இயந்திரங்களில் குளறுபடி!

சென்னை, ஆக. 3 -

கொளத்தூர் தொகுதியில் வாக்குப்பதிவு இயந்திரங்களின் எண்கள் மாறியுள்ளன கொளத்தூர் தொகுதியில் வாக்குப்பதிவு இயந்திரங்களை சீல் வைத்ததில் குளறுபடி நடைபெற்றுள்ளது.

கொளத்தூர் சட்டமன்றத் தேர்தலில் முறைகேடு நடந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளதாக தி.மு.க. சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ குற்றம்சாட்டி உள்ளார். இது குறித்து நீதிமன்றத்தை நாட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட 14 வாக்குச்சாவடிகளில் பதிவான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை மறுஆய்வு செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம் தி.மு.க. மனு அளித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து, தேர்தலுக்குப் பிறகு “சீல்” வைக்கப்பட்டு சிந்தாதிரிப்பேட்டையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சரிபார்க்கும் பணி கடந்த மாதம் 29ம் தேதி தொடங்கியது.



இந்நிலையில், செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ, தமிழ்நாட்டில் 3 தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சரிபார்க்கும் பணி திடீரென நிறுத்தப்பட்டுள்ளது பல கேள்விகளை எழுப்பி உள்ளதாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய என்.ஆர். இளங்கோ, சட்டமன்றத் தேர்தலில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரியாக பாதுகாக்கப்படவில்லைஎனகுற்றஞ்சாட்டினார்.

வாக்குப்பதிவு இயந்திரங்களின் எண்கள் மாறியுள்ளதாகவும், வாக்குப்பதிவு இயந்திரங்களை சீல் வைத்ததில் குளறுபடிகள் நடந்துள்ளதாகவும் அவர் கூறினார். கொளத்தூர் தேர்தலில் முறைகேடு நடந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டிய என். ஆர்.இளங்கோ, இது குறித்து நீதிமன்றத்தை நாட உள்ளதாக தெரிவித்தார்.

## உத்திரமேரூரில்
# வாக்கு இயந்திரங்கள் சரிபார்ப்பு! தேர்தல் முறைகேடு!

உத்திரமேரூர், ஆக. 3 -

உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியில் வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்ப்பு பணியின் போது ஒரு இயந்திரம் பழுதானதால் பரபரப்பு ஏற்பட்டது.

உத்திரமேரூர் தொகுதியில் பதிவான வாக்குகள் மற்றும் விவிபேட் இயந்திரங்களை சரிபார்க்க தி.மு.க. வேட்பாளர் க.சுந்தர், தேர்தல் ஆணையத்தில் விண்ணப்பித்திருந்தார்.

இதையடுத்து 10 வாக்குப்பதிவு இயந்திரங்களை சரிபார்க்க தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியது.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் சினேகா தலைமையில் நடைபெற்ற சரிபார்ப்பு பணியில் 9 இயந்திரங்கள் சரியாக இருந்த நிலையில், 10வது இயந்திரம் மற்றும் விவிபேட் இயந்திரம் பழுதானது தெரியவந்தது.

இந்த இயந்திரம் தி.மு.க. வேட்பாளர் க.சுந்தரின் சொந்த ஊரான சாலவாக்கம் பகுதியைச் சேர்ந்தது என்பதால், முறைகேடு நடந்திருக்குமோ என தி.மு.க.வினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# மக்களவையில் பொய்த் தகவல்!
## அமைச்சர் ஜிதேந்திர சிங்குக்கு எதிராக உரிமை மீறல்!

புதுடெல்லி, ஆக. 3 -

காங்கிரஸ் கட்சியின் எம்.பி.யான வேணுகோபால் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் ஒன்றிய அமைச்சர் ஜிதேந்திர சிங்குக்கு எதிராக உரிமை மீறல் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி நோட்டீஸ் அளித்துள்ளார்.

இந்த கடிதத்தில், ” ஜூலை 29ம் தேதி பொதுத்தேர்வுகள் திருத்த மசோதா 2026 மீதான விவாதத்தின்போது, அமைச்சர் ஜிதேந்திர சிங் துப்பாக்கிச்சூடு எதுவும் நடக்கவில்லை, கண்ணீர் புகை குண்டுகள் மட்டும் தான் பயன்படுத்தப்பட்டது.

துப்பாக்கிச்சூடு நடத்தப்படவில்லை என்றால் உத்தரவு பிறப்பிக்கும் கேள்விக்கே இடமில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்தார். அமைச்சரின் கூற்றுக்கு மாறாக துப்பாக்கிச் சூடு நடந்தது உண்மை. காயமடைந்த நபர் இன்னும் சிகிச்சை பெற்று வருகிறார். எனவே அமைச்சருக்கு எதிராக சிறப்புரிமை நடவடிக்கைகளை தொடங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## 3 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளில்
# மின் கட்டணம் பல மடங்கு அதிகரிப்பு!
## பொதுமக்கள் அதிர்ச்சி!

சென்னை, ஆக. 3 -

தமிழ்நாட்டில் கூடுதல் மின்கட்டணத்தை பார்த்து மக்களின் அதிர்ச்சியையும், வேதனையையும் சுட்டிக் காட்டி ‘தினத்தந்தி’ நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

‘தினத்தந்தி’ நாளிதழ் வெளியிட்டுள்ள சிறப்புச் செய்தியில், தமிழ்நாட்டில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் மின் கட்டணம் பல மடங்கு அதிகரித்து பதிவாகி உள்ளதை குறிப்பிட்டுள்ளது.

சென்னையிலும் பல்வேறு பகுதிகளிலும் மின் கட்டணம் அதிகமாக வந்துள்ளதாக பொதுமக்கள் புகார் தெரிவித்து வருவதை காண முடிவதாக ‘தினத் தந்தி’ குறிப்பிட்டுள்ளது.

வழக்கமாக இரண்டாயிரத்து 500 முதல் நான்காயிரம் ரூபாய் வரை மின்கட்டணம் வரும் நிலையில், இந்த முறை 16 ஆயிரம் ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும் என மின்வாரியம் குறிப்பிட்டுள்ளதாக நீலாங்கரையை சேர்ந்த தனியார் நிறுவன ஊழியர் வேதனை தெரிவித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது. தேனாம்பேட்டையைச் சேர்ந்தவரின் வீட்டில் முதல்முறையாக ஆயிரத்து 800 ரூபாய் மின் கட்டணம் வந்துள்ளது. இதற்கு முன்புவரை 700 ரூபாய்க்கும் கீழ்தான் கட்டணம் வரும் என்று இப்போது இரு மடங்கு கட்டணம் செலுத்த வேண்டிய நிலை உள்ளதாக வேதனையை பகிர்ந்துள்ளனர்.

மாமல்லபுரத்தில் பலரது வீடுகளில் வழக்கமாக வரும் மின்கட்டணம் இரு மடங்காக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் எந்த விளக்கமும் அளிக்க மறுப்பதாக மக்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

200 யூனிட் மின்சாரம் இலவசமாக தெரிந்தாலும், மறைமுகமாக மின்கட்டணத்தை அதிகமாக காட்டி கூடுதல் சுமையைதான் த.வெ.க. அரசு ஏற்படுத்தியிருப்பதாக மக்கள் பரவலாக குற்றம் சாட்டுவதை காண முடிவதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சோபா மாடல் அரசின் வஞ்சகப் போக்கிற்கு கண்டனம்!
# காஞ்சிபுரத்தில் ஆக.7 - முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு அமைதிப்பேரணி - சிலைக்கு மாலை அணிவிப்பு!
## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் – மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிக்கை!

காஞ்சிபுரம், ஆக. 3 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் காஞ்சி புரம் மேட்டு தெரு, கே.டி.எஸ். மணி, மாளிகையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு அரங்கத்தில், 1.8.2026 சனிக்கிழமை காலை மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.இனிய அரசு தலைமையில் நடைபெற்றது.

தொடக்கத்தில் மாவட்டக் கழகக் செயலாளர் க.சுந்தர் கலந்து கொண்டு அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் ஓ.எஸ்.தினகரன், க.செல்வம் எம்.பி., திருமதி கு. மலர்விழி, பொரு ளாளர் கே.ஆறுமுகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநில இளைஞர்அணி துணை செயலாளர் ப.அப்துல் மாலிக், மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச் செல்வன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.சுகுமார், எஸ். ஆர்.அப்பாதுரை, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், மாநில இலக்கிய அணி ஆர்.தசரான், காஞ்சிபுரம் மேயர் திருமதி மகாலட்சிமி யுவராஜ்,

பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.சிகாமணி, எஸ்.கே.வி.சீனிவர்சன், எஸ்.உசேன், பொன். சசிகுமார், நகர செயலாளர் கு.குமார், ஒன்றிய செயலாளர்கள் கெ.ஞானசேகரன், பி.எம்.குமார், க.குமணன், டி.குமார், பி.சேகர், பி.எம்.பாபு, பொன்.சிவக்குமார், சத்திய சாய் எம். எஸ்.பாபு. கே.கண்ணன், ஜி.தம்பு, டி.வி.கோலகுண்ணன்., ஏழுமலை,சிற்றரசு, சரவண்ணன்,ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர். கே.தேவேந்திரன்,

காஞ்சிபுரம் மாநகர பகுதி செயலாளர்கள் எஸ். சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன்,

காஞ்சிபுரம் மாநரகர நிர்வாகிகள் கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்து செல்வம், வ.ஜெகந்நாதன், கே.சுப்பரயன்,திருமதி நிர்மலா,

பேரூர் கழக செயலாளர் என்.பாண்டியன், என். எஸ்.பாரிவள்ளல், மோகன் தாஸ், சுந்தர மூர்த்தி,

மாவட்ட அணிகளின் அமைப்புளர்கள் அ. யுவராஜ், ஆ.செல்வி, நாத்திகம் நாகராஜன், வ.மலர்வண்ணன், பா.காத்திகேயன், டி.ஜெய்கணேஷ், கே.ஏ. இளைங்கோன்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.சஞ்சய்காந்தி, எம். அருள், முருகன், ஆண்டோ சிரில்ராஜ் உள்ளிட்ட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட செயலாளர் க.சுந்தர் தீர்மா னங்களை விளக்கி பேசினார்.

அத் தீர்மானங்கள் விவரம் வருமாறு:

கடந்த 2021 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி அமைந்ததும் மகளிர் இலவச விடியல் பயணம், புதுமை பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், காலை உணவுத் திட்டம், மற்றும் மகளிர் நலம், கல்வி மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் பல முக்கிய திட்டங்கள் நிறை வேற்றப்பட்டது, ஆனால் தற்போதைய சேபா மாடல் அரசு தி.மு.க. அரசின் திட்டங்களுக்கு பெயர் மாற்றம் செய்து, ஸ்டிக்கர் ஒட்டும் வேலையை தான் செய்து வருகிறது.

இந்த சோபா மாடல் அரசு அமைந்ததும் 200 யுனிட் வரை இலவச மின்சாரம் விவசாய கடன் தள்ளுபடி என குழப்பமான அறிவிப்புகளை செய்து பொதுமக்கள், விவசாயிகள் யாரும் மகிழ்ச்சியாக இல்லை , அரசு வழக்கறிஞர்கள் நியமனத்துக்கு லஞ்சம், மாநிலத்தில் குற்ற செயல்கள் மற்றும் கொலைகள் அதிகரித்து உள்ளது. லாக் அப் மரணங்கள், அரசின் நிதி மேலாண்மை மற்றும் நிர்வாக செயல்பாடுகள் மீது அதிருப்தி, தேர்தல் வாக்குறுதிகள்நிறைவேற்றாது பொது மக்களுக்கு பாதுபாப்பின்னை, காவல் துறை சுதந்திரமாக செயல் படவில்லை, அனைத்து துறைகளும் செயலழிந்து விட்டது. போதாதற்கு இந்த அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் தி.மு.க. கழகத்தினர் மீது பொய் வழக்கு என வாக்குறுதிகளை நிறைவேற்றாத இந்த சேபா மாடல் அரசை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. கழகம் வன்கையாக கண்டிக்கிறது.

நவீன தமிழ்நாட்டின் சிற்பியும் தமிழுக்காவும் தமிழ் மக்களுக்காகவும் தன் வாழ்வையே அர்ப்பணித்தவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நான் ஆகஸ்ட் 7ஆம் தேதி அன்று காஞ்சிப்புரம் மற்றும் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதியைச் சாந்த கழகத் தோழர்கள் நிர்வாகிகள் காஞ்சிபுரம் பெரியார் தூண் அருகில் காலை 7.00 மணி அளவில் திரண்டு ஊர்வலமாக சென்று கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்தும், அதேபோல மதுராந்தகம் மற்றும் செய்யூர் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த கழக நிர்வாகிகள் காலை 9 மணி அளவில் மதுராந்தகம் கலைஞர் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியிலும் பங்கேற்பதென தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நினைவேற்றப்பட்டன்.





விழுப்புரம் கலங்கரை விளக்கம் அறக்கட்டளை சார்பில் தொடர் ஓட்டம் வீரர் இ.இரனில்நாத் (விழுப்புரம் முதல் கன்னியாகுமரி ) ( கன்னியாகுமரி முதல் சென்னை ) வரை (1250 KM ) பெண்கள் பாதுகாப்பு மற்றும் புற்றுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தை கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள் நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், மாநில தமிழ்நாடு அரசு ஊழியர் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் சங்க தலைவர் வ.இருசன், நகர பொருளாளர் NN.இளங்கோ, தொ.மு.ச நிர்வாக பணியாளார் சங்க செயலாளர் வாலிபால் மணி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் கேபிள் டிவி சுரேஷ்பாபு, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பார்த்தசாரதி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ரமேஷ், வார்டு செயலாளர் பிரபு, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பூக்கடை சுந்தர், மு.நகர விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சந்தோஷ், நகர பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சி.வீரமணி, நகர தகவல் தொழில்நுட்ப அணி அபுபக்கர், ராஜபாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## மாவட்ட கூடுதல் நீதிமன்றம் மாற்ற எதிர்ப்பு!
# சிவகங்கை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்!

சிவகங்கை, ஆக. 3 –

மாவட்ட தலைநகர் சிவகங்கையில் மாவட்ட கூடுதல் நீதிமன்றம் பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது தற்பொழுது காரைக்குடியில் சட்டக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. எனவே அங்கு படிக்கும் வழக்கறிஞர்களுக்கு உதவியாக காரைக்குடிக்கு மாவட்ட கூடுதல் நீதிமன்றத்தை மாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகிறது. தலைநகர் சிவகங்கையில் இருந்து மாவட்ட கூடுதல் செசன்ஸ் நீதிமன்றம் மாற்ற எதிர்ப்பு தெரிவித்து சிவகங்கை மாவட்ட நீதிமன்ற வளாகம் முன்பாக வழக்கறிஞர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தினை நடத்தினார்கள்.

வழக்கறிஞர் சங்க தலைவர் ஜானகிராமன் தலைமையில் செயலாளர் சித்திரைசாமி முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டார்கள். சிவகங்கையில் செயல்பட்டுவரும் இந்த நீதிமன்றம் மாற்றப்படுவதால் சிவகங்கை, காளையார்கோவில், மானாமதுரை, இளையான்குடி, திருப்புவனம், திருப்பத்தூர், மதகு பட்டி, சிங்கம்புணரி கல்லல் ஆகிய பகுதிவகளைச் சேர்ந்த வழக்கு நடத்துபவர்கள் மிகவும் பாதிக்கப்படுபவர்கள். இந்த நீதிமன்றம் மாற்றப்பட்டால் இவர்கள் அனைவரும் வெகு தொலைவில் உள்ள காரைக்குடிக்கு செல்ல வேண்டும். இதனால் அலைச்சலும் பணமும் அதிகம் செலவாகும்.

எனவே காரைக்குடி சட்டக்கல்லூரிக்கு தனியாக ஒரு நீதிமன்றம் அமைக்குமாறு அரசிற்கு கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தினை முன்னிட்டு சிவகங்கை நீதிமன்றத்தில் நடை பெற்ற வழக்குகள் அனைத்தும் ஒத்தி வைக்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# சைதை கா. கிட்டு
## ஆகஸ்ட் 3 (2011)



இளம்வயதிலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு, சைதை தொகுதி 139வது வட்டத்தில் சார்புமன்ற செயலாளராகப் பொறுப்பேற்று, பின்னர் படிப்படியாக வட்டப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், பகுதிக் கழகப் பொறுப்பாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புக்களை வகித்ததோடு, 1991 முதல் 2003ஆம் ஆண்டு வரை தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

1996ல் சைதை சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, சிறப்பாக பணியாற்றி அத்தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் ‘சைதை கிட்டு – செயலில் சிட்டு’ என்று பாராட்டப்பட்டதோடு, “சைதைத் தொகுதியில் நான் நிற்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்களால் கட்டளையிடப்பட்டபோது, இங்கே நான் நிற்கிறேனா – சைதை கிட்டு நிற்கிறாரா என்ற சந்தேகம் ஏற்படும் அளவுக்கு அரும்பணியாற்றியவர் தம்பி கிட்டு” என தலைவர் கலைஞர் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.